www.Padasalai.Net www.CBSEtips.in

# இரண்டாம் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2019

## பன்னிரெண்டாம் வகுப்பு

Reg.No [ ]

நேரம்: 1.30 மணி

## வரலாறு

மதிப்பெண்கள்: 45

### பகுதி - I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 10 x 1 = 10

1. பூமிதான இயக்கத்தைத் தோற்றுவித்தவர்
   a) ராம் மனோகர் லோகியா b) ஜெயப் பிரகாஷ் நாராயணன்
   c) வினோபா பாவே d) சுந்தர் லால் பகுகுனா
2. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் (MGNREGA)
   a) 200 b) 150 c) 100 d) 75
3. 'நவீன செயல்முறை அறிவியலின் தந்தை எனக் கருதப்படுபவர் யார்?
   a) அரிஸ்டாட்டில் b) பிளேட்டோ c) ரோஜர் பேக்கன் d) லாண்ட்ஸ் டெய்னர்
4. கூற்று : கலிலியோ கலிலி தேவாலய விரோத போக்குக்காக கிறிஸ்தவ திருச்சபையால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

   காரணம் : சூரியனை மையமாக வைத்து கோள்கள் சுற்றுகின்றன என்ற கோபர் நிகஸின் சூரிய மையக் கோட்பாட்டை அவர் ஏற்றார்.
   a) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.
   b) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
   c) கூற்று சரி, காரணம் தவறு.
   d) கூற்று தவறு, காரணம் சரி
5. பாஸ்டன் தேநீர் விருந்து நிகழ்வு ________ இல் நடைபெற்றது.
   a) 1775 b) 1773 c) 1784 d) 1799
6. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
   A) மான்டெஸ்கியூ - 1. ஜேகோபியர்கள்
   B) வால்டர் - 2. ஆங்கிலேய நாட்டுத் தத்துவவாதி
   C) பயங்கர ஆட்சி - 3. பதினான்காம் லூயியின் காலம்
   D) ஜான் லாக் - 4. சட்டங்களின் சாரம்
   a) 1,3,4,2 b) 4,3,1,2 c) 4,1,2,3 d) 1,4,3,2
7. நெப்போலியன் முதன் முறை நாடு கடத்தப்பட்டு சிறை வைக்கப்பட்ட இடம் ________ ஆகும்.
   a) எல்பா b) செயின்ட் ஹெலனா c) கார்சிகா d) வாட்டர்லூ
8. இளம் இத்தாலி இயக்கம் ________ ஆண்டு துவக்கப்பட்டது.
   a) 1822 b) 1827 c) 1831 d) 1846
9. "An inquiry into the nature and causes of the wealth of nations" என்ற நூலை எழுதியவர் ________ ஆவார்.
   a) ஆடம் ஸ்மித் b) தாமஸ் பைன் c) குஸ்னே d) கார்ல் மார்க்ஸ்
10. முசோலினி ஆசிரியராகப் பணியாற்றிய பத்திரிகையின் பெயர் யாது?
    a) அவந்தி b) ப்ராவ்தா c) மார்க்சிஸ்ட் d) மெயின் காம்ப்

### பகுதி - II

II. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி: 4 x 2 = 8

11. சமதர்ம சமூக அமைப்பு என்பதைப் பற்றி நீ அறிந்ததென்ன?
12. கிறித்தவ சீர்திருத்த இயக்கத்திற்கு எராஸ்மஸ் எவ்வாறு வழியமைத்தார்?

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
Scanned by CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



13. மனிதன் மற்றும் குடிமக்களின் உரிமைப் பிரகடனத்தின் சாரம்சத்தை அடிக்கோடிட்டுக் காட்டவும்.
14. தொழிற்புரட்சியின் சிறப்புக் கூறுகளை முன்னிலைப்படுத்திக் காட்டவும்.
15. இத்தாலியை மெட்டர்னிக் "வெறும் பூகோள வெளிப்பாடே" என ஏன் கூறினார்?
16. ...வர் தலையீடு" எனப்படுவது யாது?

## பகுதி - III

**III. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி:** 4 x 3 = 12

17. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை?
18. மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியது ஏன்?
19. அமெரிக்க புரட்சியின் முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்க.
20. "செப்டம்பர் படுகொலைகள்" எதனால் ஏற்பட்டது?
21. பிரான்ஸ் தும்பினால், ஐரோப்பாவிற்கு ஜலதோஷம் - தெளிவுபடுத்துக.
22. அகழிப் போர் எவ்வாறு நடத்தப்பட்டது?

## பகுதி - IV

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 3 x 5 = 15

23. a) இந்திய விடுதலைக்குப் பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க.

*(அல்லது)*

b) பிராட்டஸ்டன்ட் சீர்திருத்த இயக்கத்துக்கான காரணங்கள் யாவை? ஜெர்மனியில் மார்ட்டின் லூதர் இந்த இயக்கத்தை எவ்வாறு ஒருங்கிணைத்தார்?

24. a) அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகள் குறித்து விவரிக்கவும்.

*(அல்லது)*

b) இத்தாலிய இணைவு எவ்வாறு சாத்தியமாக்கப்பட்டது?

25. a) முதல் உலகப்போருக்கான காரணங்களையும், விளைவுகளையும் கணக்கிடுக.

*(அல்லது)*

b) "மார்க்ஸ் தீப்பொறியை வழங்கவும், அதை லெனின் தீபமாக ஏற்றினார்" - தெளிவுபடுத்துக.

******

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
Scanned by CamScanner